**செய்தி வெளியீடு எண்: 832** **நாள்:04.11.202**

# தொழிலாளர் துறை

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் **டாக்டர் நிலோபர் கபில்** அவர்கள் தலைமையில் **1982** ஆம் ஆண்டு, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழான ஆலோசனைக்குழு கூட்டம் **04.11.2020** அன்று சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள தமிழ்நாடு தொழிலாளர் நல வாரிய கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, திரு. **Md. நசிமுத்தீன்,** இ.ஆ.ப., அரசு தலைமைச் செயலாளர் நிதித்துறை அவர்களின் பிரதிநிதி, தொழிலாளர் ஆணையர் முனைவர் **இரா. நந்தகோபால்,** இ.ஆ.ப., தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் திரு. **சு. பொன்னுசாமி,** தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலவாரிய செயலாளர் திரு. **ஆ. திவ்வியநாதன்** ஆகியோரும் **அரசு தரப்பு பிரதிநிதிகள், வேலையளிப்போர் தரப்பு பிரதிநிதிகள், தொழிலாளர்கள் தரப்பு பிரதிநிதிகள்** மற்றும் தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

மேற்படி ஆலோசனைக்குழு கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் தொடர்பான சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட 2017-18, 2018-19, 2019-20 மற்றும் 2020-21ம் ஆண்டிற்கான அறிவிப்புகள் மீது ஆலோசனைக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் வாரியங்கள் தொடர்பான விவாதப் பொருட்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**